இதிலே நான் இப்போது சொன்னது இண்டஸ்ட்ரியல் யூனிட்ஸ் பற்றியது.
automobile spare parts, manufacture of plastics, light engineering machines, agricultural implements
என்ற இந்த வகையான தொழில்களை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மாதிரி இண்டஸ்ட்ரியல் யூனிட்சை சிறு தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்கிறோம். அதே நேரத்தில் அண்மையிலே நான்கு மாத மின்சார டெபாசிட் வேண்டுமென்று கேட்ட காரணத்தால் பல சிறு தொழில் நிறு வனங்கள் டெபாசிட்டைக் கட்ட முடியாமல் திண்டாடுவதாகப் புகார் வந்திருக்கிறது. அப்படியானால் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அவர்களுடைய சிரமத்தைத் தணிக்க ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெபாசிட் தொகை கட்டுவதில் உள்ள சிரமங்களைப் பற்றி இந்த மன்றத் திலும் மேல் சபையிலும் சொன்னார்கள். சிறு தொழில் அதிபர் களும் என்னைச் சந்தித்துச் சொன்னார்கள். அந்தத் தொகையை இன்ஸ்டால்மென்ட் பேமென்டாகக் கட்டலாம் என்று மின் வாரி யத்தின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Industrial Complex at Manamadurai

*686 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration to locate an industrial complex near Manamadurai in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை அருகில் தொழில் தொகுதி ஒன்றை உருவாக்க உத்தேசித்துள்ளது. இத்தொழில் தொகுதிக்குத் தேவையான பட்டா நிலங்களை ஆர்ஜிதப்படுத்தவும் புறம்போக்கு நிலங்களை மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சோணையா : மானாமதுரை அருகில் இந்தத் தொழிற் தொகுதி எவ்வளவு ரூபாயில் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறது ? அந்த வேலை இன்னும் தொடங்கப்படவில்லை எப்போது அதைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 111 ஏக்கர் தனியார் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான 732 ஏக்கர் நிலங்களை செய்களத்தூர், சிறுபள்ளம், கே.ஆர். பள்ளம் கிராமங்களில் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ரெவின்யூ அதிகாரி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சாக வைகை ஆற்றுப் படுகையில் இருந்து குடி தண்ணீர் எடுக்கும் நடவடிக்கையும் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் வட்டாரத்தில் குளோரைடு பாக்டரி கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு பங்குதாரர்கள் எல்லாம் சேர்த்த பிறகு அதை அரசாங்கம் தனியார் துறைக்குக் கொடுத்திருப்ப தாகத் தகவல் வந்திருக்கிறது. அதை மறுபடியும் கூட்டுறவுத் துறையில்—மானுமதுரையில் ஆற்றுப்படுகை இருக்கும் காரணத் தால் தண்ணீர் வசதி இருக்குமென்ற அடிப்படையில் மானுமதுரை யில் மீண்டும் இந்தத் தொழில்களோடு இதையும் சேர்த்துத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொட்டாஷியம் குளோ ரைடு என்ற தொழிற்சாலை தனி நபர்களும் அரசாங்கமும் சேர்ந்து கூட்டுத்துறையில் மேலூர் வட்டத்தில் தொடங்கப்பட்டி ருக்கிறது. அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை மதுரைக்குப் பக்கத்தில் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டிருக்கிறது.

உரோமப் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்

*687 வினு— திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விண்ணமங்கலம், ''டேன்ஸி'' உரோமப் பத னிடும் தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் தேவை என்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை

(இ) எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. இன்னும் அது நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் ஆலோசனை சொல்ல நல்ல ஆட்களாக, தோல் தொழிலின் நுணுக்கங்களைத் தெரிந்த வர்களாகக் கொண்ட ஒரு குழுவை அமைக்க அரசு முன் வருமா ?